# இந்தி கட்டாய பாடப் பலன்.

## பள்ளிக்கூட புறக்கணிப்பு

காஞ்சிபுரம், ஜுலை. 27-

இது வரையில் என்னுடைய தந்தையார் முதல் அனைவரும் காஞ்சிபுரம் பச்சையப்பன் கலா சாலையிலேயே நாங்கள் படித்து உயர்தரக்கல்விக்கு சென்றோம் இப்பொழுதும் என்னுடைய இரண்டு மக்களையும் 3-வது 2-வது பாரம் படித்துவரும், அதே கலா சாலையில் படிக்க வைத்திருந்தேன். சென்ற 2 மாத காலமாக கட்டாய இந்தி இந்த பள்ளிக்கூடத்தில் போதிக்கப் பட்டு வருவதால், ஷை பள்ளிக்கூடத்தில் என்னுடைய குழந்தைகளை படிக்க விடாமல், மிஷன் கல்லூரியில்சேர்த்து கல்விகற்பிக்கப்பட்டு வருகிறார்கள். கட்டாய இந்தியை புகுத்துவதினால் வரும் தீமைகளை நம் தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்து தங்கள் பிள்ளைகளை வேறு பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவைக்கும்படி மிகவும் வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். தமிழர் தமிழ்நாட்டு அரசாட்சிதோன்ற வெகுகாலமில்லை. இன்று கட்டாய இந்தி சொல்லிக்கொடுக்கும் கலாசாலைகள் எல்லாம் வெகு சீக்கிரத்தில் ஒழிந்து போவது திண்ணம் என்று தோழர் காஞ்சிபரவஸ்து ராஜகோபாலாச்சாரியார் எழுதுகிறார்.